அனுப்புநர்
திருமதி.லோ.ஜேன் கிறிஸ்டி பாய், பி.காம்.,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர் (பொ),
தூத்துக்குடி

பெறுநர்
ST. Mary's college.
Tuticorin-628 001.

ந.க.எண்.பிசி4/14871/2022 நாள். 22.07.2022

அய்யா/அம்மையீர்,

பொருள் கல்வி உதவித்தொகை - பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் - கல்வி உதவித்தொகைத்திட்டம் 2022-2023 ம் ஆண்டு புதியதாக சேர்க்கப்பட வேண்டிய கல்வி நிறுவனங்கள், புதிய பாடப்பிரிவுகள் மற்றும் தேர்வு கட்டணம் மாற்றம் செய்தல்-கல்வி உதவித்தொகை பெறுவதற்கு ஆதார் எண் கட்டாயம் இணைத்தல் - விவரங்கள் கோருதல் - தொடர்பாக.

பார்வை 1.இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அவர்களின் கடித எண்:டி1/5210/ 2022 நாள்:13.7.2022

2. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆணையர் அவர்களின் கடித எண்:டி1/8175/2021 நாள்:15.07.2022

*******

பார்வை 1ல் காணும் கடிதத்தின்படி, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அரசு/அரசு நிதி உதவி பெறும் கலை (ம) அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிலும் பிவ, மிபிவ மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணாக்கர்களுக்கு 2022-2023 ம் கல்வி ஆண்டில் கல்வி உதவித்தொகை வழங்க ஏதுவாக கல்லூரியில் புதியதாக துவக்கப்பட்டுள்ள பாடப்பிரிவுகள் சிறப்புக்கட்டணம், தேர்வுக்கட்டணம் உள்ளிட்டவற்றில் மாறுதல்/திருத்தங்கள் பற்றிய விவரங்கள் கீழ்கண்டவாறுள்ள படிவங்களில் பூர்த்தி செய்து அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

I. புதியதாக துவக்கப்பட்டுள்ள கல்லூரிகளுக்கு அடையாள எண் (ID & Password) வழங்க கீழ்க்கண்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

I. Name and Full address of the College.
II. Classification of the College (Govt/govt aided/Self Financing)
III. E-Mail id and Mobile No.

அனுப்புநர்
திருமதி.லோ.ஜேன் கிறிஸ்டி பாய், பி.காம்.,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர் (பொ),
தூத்துக்குடி

பெறுநர்
ST. Mary's College.
Tuticorin-628 001.

ந.க.எண்.பிசி4/14871/2022 நாள். 22.07.2022

அய்யா/அம்மையீர்,

பொருள் கல்வி உதவித்தொகை - பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் - கல்வி உதவித்தொகைத்திட்டம் 2022-2023 ம் ஆண்டு புதியதாக சேர்க்கப்பட வேண்டிய கல்வி நிறுவனங்கள், புதிய பாடப்பிரிவுகள் மற்றும் தேர்வு கட்டணம் மாற்றம் செய்தல்-கல்வி உதவித்தொகை பெறுவதற்கு ஆதார் எண் கட்டாயம் இணைத்தல் - விவரங்கள் கோருதல் - தொடர்பாக.

பார்வை 1.இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அவர்களின் கடித எண்:டி1/5210/ 2022 நாள்:13.7.2022

2. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆணையர் அவர்களின் கடித எண்:டி1/8175/2021 நாள்:15.07.2022

*******

பார்வை 1ல் காணும் கடிதத்தின்படி, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அரசு/அரசு நிதி உதவி பெறும் கலை (ம) அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிலும் பிவ, மிபிவ மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணாக்கர்களுக்கு 2022-2023 ம் கல்வி ஆண்டில் கல்வி உதவித்தொகை வழங்க ஏதுவாக கல்லூரியில் புதியதாக துவக்கப்பட்டுள்ள பாடப்பிரிவுகள் சிறப்புக்கட்டணம், தேர்வுக்கட்டணம் உள்ளிட்டவற்றில் மாறுதல்/திருத்தங்கள் பற்றிய விவரங்கள் கீழ்கண்டவாறுள்ள படிவங்களில் பூர்த்தி செய்து அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

I. புதியதாக துவக்கப்பட்டுள்ள கல்லூரிகளுக்கு அடையாள எண் (ID & Password) வழங்க கீழ்க்கண்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

I. Name and Full address of the College.
II. Classification of the College (Govt/govt aided/Self Financing)
III. E-Mail id and Mobile No.

IV. University to which the college is attached (with recognition/approval copy)

V. Courses to be included with fee details (Subject wise/course year wise/course wise fees details with fees approval copy in the following

VI. copy of Orders fixing the Examination fee (Exam Fee approval copy format)

VII. If self financing college-copy of BC/MBC students counseling order (one student's Order copy for each course)

| S.No | Name of the Course | Course year | Tuition Fees | Special Fees | Other Compulsory Fees | Exam Fees | Total | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

2) கல்லூரிகளில் புதிதாக துவங்கப்பட்டுள்ள பாடப்பிரிவுகளை இணைய தளத்தில் சேர்க்க கீழ்க்கண்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

I. அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகளின் புதியதாக துவங்கப்பட்ட பாடப்பிரிவுகளுக்கான அரசாணை நகல்

II. சுயநிதி கல்லூரிகள் ஒவ்வொரு பாடப்பிரிவுக்கும் ஒற்றைச்சாளர முறையில் (Singlewindow System) Conseling மூலம் சேர்ந்த பிவ/மிபிவ மாணவர்களின் ஒரு counseling order copy உழில நகல்

III. கட்டண விவரங்கள் பின்வரும் படிவத்தில் சமர்பிக்க வேண்டும்.

| S.No | Name of the course | Course year | Amount sanctioned under post matric scholarship schemes | | | | Amount sanctioned under Free education scholarship schemes | | | | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Tution fees | Special fees | Exam fees | Total | Special fees | Other compuls ory fees/No refund able fees | Exam fees | Total | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

குறிப்பு: 2021-2022 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் நடத்தப்படும் 5 Years Integrated Course ற்கு கல்விஉதவித்தொகை வழங்கப்படுகிறது. எனவே, 5 Year Integrated Course பாடப்பிரிவுகள் சேர்க்க விண்ணப்பங்கள் அளிக்கலாம்.

Self Supporting course பாடப்பிரிவுகளுக்கு தற்போது கல்வி உதவித்தொகை வழங்கப்படுவதில்லை என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

IV கட்டண விவரங்கள் திருத்தம் செய்தல்:

1) அரசு அரசு உதவி பெறும் கல்லூரிகள் சிறப்புக்கட்டணம், சிறப்பு கட்டணம், இதர கட்டாயக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் விவரம் ஆண்டு வாரியாக பின்வரும் படிவத்தில் அளித்திட வேண்டும்.
2) சுயநிதி கல்லூரிகள் தேர்வுக் கட்டணம் விவரம் மட்டும் ஆண்டு வாரியாக பின்வரும் படிவத்தில் அளித்திட வேண்டும்.

| S.No | Name of course | Course year | Status | Amount sanctioned under post matric scholarship schemes | | | | Amount sanctioned under Free education scholarship schemes | | | | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Tution fees | Special fees | Exam fees | Total | Special fees | Other compulsory fees/Nonerfund | Exam fees | Total | |
| 1 | B.A | 1st | Exiting | | | | | | | | | |
| | | | Revision Requested | | | | | | | | | |
| 2 | B.A | 2nd | Exiting | | | | | | | | | |
| | | | Revision Requested | | | | | | | | | |
| 3 | B.A | 3d | Exiting | | | | | | | | | |
| | | | Revision Requested | | | | | | | | | |

இதுபோன்று B.Sc/B.Com/BE/IBVSC என தங்கள் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் பல்வேறு பாடப்பிரிவுகளின் ஆண்டுவாரியான கட்டணவிவரங்கள் அளிக்கப்பட வேண்டும்.

எனவே, தங்கள் கல்லூரியில் மேற்கண்ட திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் அதன் விவரங்களை இரண்டு பிரதிகள் இவ்வலுவலகத்தில் 31.7.2022 க்குள் சமர்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் மாணவ/மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை பெற இணையதளத்தில் பதிவுகள் மேற்கொள்ளாத நிலை நேர்ந்தால் சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களே முழு பொறுப்பாக நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் பார்வை 2இல் காணும் கடிதத்தில் மாணாக்கர்களது பெயர்களானது ஆதாரில் உள்ளபடியே மற்ற ஆவணங்களிலும் ஒரேமாதிரியாக அளிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதை நடைமுறை படுத்தும்படியும் மேற்கண்டவாறு கோரப்பட்ட விவரங்களை 02.08.2022 க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் மேற்கண்ட கட்டணமாற்றங்கள் புதியதாக சேர்க்கப்பட வேண்டிய விவரங்கள் ஏதும் இல்லையெனில் இன்மை அறிக்கையினை தவறாது வழங்கப்பட வேண்டும் என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒம்/- லோ. ஜேன் கிறிஸ்டி பாய்,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர் (பொ),
தூத்துக்குடி

22.7.22
கண்காணிப்பாளர்

22/7/22

கல்லூரிக் கல்வித் துறை

அனுப்புநர்

முனைவர்.இரா.பாஸ்கரன்.M.Sc., M.Phil., Ph.D.,
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
திருநெல்வேலி-8.

பெறுநர்

செயலர் /முதல்வர்,
அரசு உதவி பெறும் கல்லூரிகள்,
திருநெல்வேலி மண்டலம்.

ந.க.எண் 11083/அ4/2022. நாள் : 07.10.2022.

அய்யா/அம்மையிர்,

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை - கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலி மண்டலம் - 2022-23ம் நிதியாண்டு ஈ.வெ.ரா. நாகம்மை நினைவு மகளிர் இலவச முதுநிலை பட்ட மேற்படிப்பு உதவித்தொகை திட்டம் - கருத்துரு அனுப்பக் கோருதல் - தொடர்பாக.

பார்வை: சென்னை, கல்லூரி கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்:38903/M2/22 நாள்: 28.09.2022.

----------

பார்வையில் காணும் சென்னை, கல்லூரி கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி 2022-23ம் நிதியாண்டில் ஈ.வெ.ரா. நாகம்மை நினைவு மகளிர் இலவச முதுநிலை பட்ட மேற்படிப்பு உதவித்தொகை திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. தங்கள் கல்லூரியில் முதநிலை பட்டபடிப்பு பயிலும் தகுதியுள்ள மாணவிகளுக்கு ஈ.வெ.ரா. நாகம்மை நினைவு மகளிர் இலவச முதுநிலை பட்ட மேற்படிப்புக்கான உதவித்தொகை தொடர்பான கருத்துருவினை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்
திருநெல்வேலி – 8.

இணைப்பு: கடிதம்

நகல்:
இவ்வலுவலக கணக்க அலுவலர் ,ஆ, இ, ஈ, உ பிரிவு கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள்.

14 SEP 2022

கல்லூரிக் கல்வித் துறை

அனுப்புநர்
முனைவர். திரு.ம.ஈஸ்வரமூர்த்தி,
எம்.எஸ்.சி., எம்.பில்., பிஎச்.டி.,
கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ.),
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சென்னை-600 006.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்,
அனைத்து மண்டலம்.

010051 4829/2020

ந.க.எண்: 35327/எல்1/ 2022, நாள். 13.09.2022.

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை - 2021-2022 ஆம் கல்வியாண்டிற்கு ஆதிதிராவிடர் / மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை விடுவிக்கப்பட்டது - மாணாக்கர்களின் வங்கிக் கணக்கு தவறுதலின் காரணமாக கல்வி உதவித் தொகை விடுவிக்கப்பட்ட பின்னர் கல்விக் கட்டணம் பெற்றுக்கொள்ள கல்வி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தக் கோருதல் - சார்பு.

பார்வை: சென்னை-05, சேப்பாக்கம், ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். எல்1/35459/2021-2 நாள். 16.08.2022.

---

பார்வையில் காணும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் கடித நகலினை தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் இக்கடிதத்துடன் இணைத்தனுப்புகிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தினையும் மற்றும் அதன் நகலினை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து அரசு/அரசு உதவி பெறும்/சுயநிதிக் கல்லூரிகளுக்கு சுற்றறிக்கை மூலம் அனுப்பி வைக்குமாறும், அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தவறாமல் அனுப்பிடுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

ம.ஈஸ்வர 13/09/22
கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ)

இணைப்பு: மேற்படி
நகல் பணிந்தனுப்பலாகிறது:
இயக்குநர்,
ஆதிதிராவிட நல இயக்குநரகம்,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

13/9/22

ந.க. எண்: 4829/~~அ~~/அ3/2020- நாள்: 21.09.22

"நகல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் ~~இக்கடிதத்துடன்~~ அனுப்பலாகிறது.

21.9.22
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
திருநெல்வேலி - 627 008.

பெறுநர்:
முதல்வர்
அனைத்து அரசு/அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரிகள்
திருநெல்வேலி மண்டலம்.

20/09/22

# ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்

பெறுநர்

அனுப்புநர்

திரு. த. ஆனந்த்.இ.ஆ.ப.,
இயக்குநர்,
ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்,
சேப்பாக்கம், சென்னை 600005.

035327

1. இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
கிண்டி, சென்னை 25.
2. இயக்குநர்,
பல்தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
கிண்டி, சென்னை 25.
3. இயக்குநர்,
மருத்துவக் கல்வி இயக்ககம்,
சென்னை 10.
4. இயக்குநர்,
கல்லூரி கல்வி இயக்கம்,
சென்னை 06
5. இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை 6
6. இயக்குநர்,
இந்திய மருத்துவம் மற்றும்
ஹோமியோபதி, அரும்பாக்கம்.
சென்னை 106

26 AUG 2022

ந.க.எண் எல்1/ 35459 /2021-2 நாள்: 16.08.2022

அய்யா / அம்மையீர்

பொருள் ஆதிதிராவிடர் நலம் – 2021-2022 ஆம் கல்வியாண்டிற்கு ஆதிதிராவிடர் / மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை விடுவிக்கப்பட்டது – மாணாக்கர்களின் வங்கிக் கணக்கு தவறுதலின் காரணமாக கல்வி உதவித்தொகை விடுவிக்காத மாணாக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை விடுவிக்கப்பட்ட பின்னர் கல்விக் கட்டணம் பெற்றுக்கொள்ள கல்வி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தக் கோருதல் – தொடர்பாக

பார்வை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகள்

☺☺☺☺☺☺

பார்வை ஒன்றில் காணும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி, 2020-2021 ஆம் கல்வியாண்டு முதல் ஒன்றிய, மாநில அரசுகளுக்கிடையேயான திட்டச் செலவு நிதி பகிர்வு முறையே 60 : 40 விழுக்காடு என்ற விகிதத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிற்கான ஒரு பயனாளியின் மொத்த கல்வி உதவித் தொகையில் 40 விழுக்காடு மாநில அரசும், 60 விழுக்காட்டு ஒன்றிய அரசும் நேரடியாக பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு கல்வி உதவித் தொகையாக விடுவிக்கப்பட்டு வருகிறது.

**போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மாணாக்கர்களின் விவரங்கள் பின்வருமாறு (16.08.2022 அன்றைய நிலையில்)**

ஒன்றிய அரசால் (60 விழுக்காடு) கல்வி உதவித் தொகை விடுவிக்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு

| வ.எ | விவரங்கள் | மாணாக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கல்வி உதவித் தொகை வழங்கக்கோரி இணையவழியில் விண்ணப்பித்த மாணாக்கரிகளின் எண்ணிக்கை | 6,98,988 |
| 2. | மாணாக்தர்கள் இடைநிறுத்தம் / வேறு கல்லூரி சேர்க்கை காரணமாக கல்வி உதவித் தொகை விண்ணப்பங்கள் கல்லூரி / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / துறைத் தலைவர்கள் நிலையில் நிராகரிக்கப்பட்டவை | 4,450 |
| 3. | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / துறைத் தலைவர்கள் நிலையில் கல்வி உதவித் தொகை பரிந்துரைக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை | 6,94,538 |
| 4. | ஒன்றிய அரசு 60 விழுக்காடு கல்வி உதவித் தொகை விடுவிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை | 6,51,444 |
| 5. | **ஒன்றிய அரசு 60 விழுக்காடு வழங்கப்பட வேண்டிய பயனாளிகளின்** | |

| | எண்ணிக்கை | |
|---|---|---|
| (i) | கல்வி உதவித் தொகை வழங்க ஒன்றிய அரசின் பரிசீலனையில் உள்ள பயனாளிகளின் எண்ணிக்கை | 11,008 |
| (ii) | கல்வி உதவித் தொகை இணையதளம் / சேமிப்புக் கணக்கு விவரங்களில் மாணாக்கர் பெயர் மாறுதல் காரணமாக கல்வி உதவித் தொகை சென்றடையாத பயனாளிகளின் எண்ணிக்கை | 12,812 |
| (iii) | மாணாக்கர்களின் வங்கிக் கணக்கு விவரங்களில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக கல்வி உதவித்தொகை சென்றடையாத பயனாளிகளின் எண்ணிக்கை (வங்கிகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டது / IFSC தவறு / வங்கிக் கணக்கு எண் தவறு / மினிமம் தொகை இருப்பில் இல்லாமை உள்ளிட்ட காரணம்) | 19,274 |

மாநில அரசால் (40 விழுக்காடு) கல்வி உதவித் தொகை விடுவிக்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு :

| வ.எ | விவரங்கள் | மாணாக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கல்வி உதவித் தொகை வழங்கக்கோரி இணையவழியில் விண்ணப்பித்த மாணாக்கரிகளின் எண்ணிக்கை | 6,98,988 |
| 2. | மாணாக்கர்கள் இடைநிறுத்தம் / வேறு கல்லூரி சேர்க்கை காரணமாக கல்வி உதவித் தொகை விண்ணப்பங்கள் கல்லூரி / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / துறைத் தலைவர்கள் நிலையில் நிராகரிக்கப்பட்டவை | 4,450 |
| 3. | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / துறைத் தலைவர்கள் நிலையில் கல்வி உதவித் தொகை பரிந்துரைக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை | 6,94,538 |
| 4. | மாநில அரசு 40 விழுக்காடு கல்வி உதவித் தொகை விடுவிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை | 6,63,088 |

| | | |
|---|---|---|
| 5. | மாநில அரசு 40 விழுக்காடு வழங்கப்பட வேண்டிய பயனாளிகளின் எண்ணிக்கை | |
| (I) | மாணாக்கர்களின் வங்கிக் கணக்கு விவரங்களில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக கல்வி உதவித்தொகை சென்றடையாத பயனாளிகளின் எண்ணிக்கை (வங்கிகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டது / IFSC தவறு / வங்கிக் கணக்கு எண் தவறு / மினிமம் தொகை இருப்பில் இல்லாமை உள்ளிட்ட காரணம்) | 31,452 |

2021–2022 ஆம் கல்வியாண்டிற்கு, 13.12.2021 அன்று இணையதளம் மறுதிறப்பு செய்யப்பட்ட அன்று, இணைய பக்கத்தில் வங்கிகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டதன் காரணமாக மாணாக்கர்களின் சரியான வங்கிக் கணக்கு விவரங்கள் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இருப்பினும், கல்வி நிறுவனங்கள் மாணாக்கர்களின் சரியான வங்கிக் கணக்கு விவரங்களை பதிவேற்றம் செய்யாத காரணத்தினால், சில மாணாக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை சென்றடையவில்லை. இது கல்வி நிறுவனங்களின் தவறே ஆகும்.

எனவே, கல்வி உதவித்தொகை சென்றடையாத மாணாக்கர்களுக்கு, சரியான வங்கிக் கணக்கு விவரங்கள் பதிவேற்றம் செய்ய ஏதுவாக இணையதளத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் பின்னர், மாணாக்கர்கள் சார்பான சரியான வங்கிக் கணக்கு விவரங்களை கல்வி நிறுவனம் பதிவேற்றம் செய்த பின்னர் ஒன்றிய அரசிற்கு தகவல்கள் பரிமாற்றம் செய்யப்படும். அதன் பின்னர் கல்வி உதவித் தொகை விடுவிக்கப்படும் . **அதுவரை மாணாக்கர்களிடம் கல்விக் கட்டணம் கல்லூரிக்கு செலுத்தக்கோரி வற்புறுத்தக்கூடாது எனவும், 2022–2023 ஆம் கல்வியாண்டிற்கு கல்வி பயில அனுமதிக்குமாறும், தங்களது ஆளுகைக்குகீழ் செயல்படும் அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் அறிவுறுத்துமாறு** கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/– த.ஆனந்த்.,
ஆதிதிராவிடர் நல இயக்குநர்.

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக

அனுப்புநர்

[illegible] B.Com.,

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

நல அலுவலர் (பொ),

தூத்துக்குடி.

பெறுநர்

1. இணை இயக்குநர்,

கல்லூரி கல்வி இணை இயக்குநரகம்,

திருநெல்வேலி.

2. முதல்வர்,

அரசு / அரசு உதவி பெறும் மற்றும்

சுயநிதி கல்லூரிகள்.

(மின்னஞ்சல் வழியாக)

ந.க.ஆ-ந.8/223336 /2022 நாள் 26.09.2022

அய்யா/அம்மையீர்,

| | |
|---|---|
| பொருள் | ஆதிராவிடர் நலம் - தூத்துக்குடி மாவட்டம் - கல்வி உதவித் தொகை - 2022-2023 -ம் கல்வியாண்டு - உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை திட்டம் - பயனாளிகள் விவரம் அனுப்பக் கோருதல் - தொடர்பாக |
| பார்வை | ஆணையர் ஆதி திராவிடர் நல ஆணையரசம், சென்னை கடிதம் ந.க.ஜே4/15538/2021 நாள் 11.01.2022. |

.....

தூத்துக்குடி 2022-2023 ம் கல்வியாண்டில் உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை அரசு / அரசு உதவி பெறும் கல்வி நிலைய கட்டண விடுதிகளில் தங்கிப் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மதம் மாறிய கிறித்துவ மாணாக்கர்களுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகையுடன் கூடுதலாக விடுதி நிதியுதவிக் தொகை பின்வரும் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

1. பட்டப்படிப்பு , பாலிடெக்னிக் படிக்கும் மாணாக்கர்களுக்கு ஆண்டிற்கு ரூ.7500/- நிதியுதவித் தொகை வழங்கப்படுகிறது.
2. முதுகலைப் பட்டப் படிப்பு, தொழில் படிப்புகளில் இளங்கலை / முதுகலை படிக்கும் மாணாக்கர்களுக்கு ஆண்டிற்கு ரூ.8000/- நிதியுதவித் தொகை வழங்கப்படுகிறது.
3. ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சம் வரை
4. இலவச விடுதியில அல்லாமல் கட்டண விடுதிகளில் தங்கிப் பயில்பவர்களுக்கும் இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது.

உயர் கல்வி சிறப்பு உதவித்தொகை பெற தகுதியுடைய மாணாக்கர்களுக்கு அவர்தம் வங்கி கணக்கு எண்ணிற்கே ECS மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை கல்வி வழங்க பெறப்படும் கேட்புகளில்.

1. கல்வி உதவித் தொகை விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து அனுப்பிடவும்.

2. மாணாக்கரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல்.

3. ஆதார் எண்.

4. ஆதார் எண் வங்கி எண்ணுடன் இணைக்கப்பெற்றிருக்கவேண்டும்.

மேலும் தங்கள் கல்லூரியில் பயிலும் மாணக்கர்களுக்கு உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை வழங்கிட உரிய படிவத்தில் பூர்த்தி செய்து Excel மென்நகலாகவும். வன்நகலாகவும் dadwoaw8@gmail.com என்ற இணைய தள முகவரிக்கு இவ்வலுவலகத்திற்கு 15.10.2022-க்குள் அனுப்பி வைத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

26/09/2022

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலருர்.
தூத்துக்குடி.

26/9/22

அனுப்புநர்:

திரு. து.விக்னேஸ்வரன்.,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலகம்,
தூத்துக்குடி.

//மின்னஞ்சல் மூலம்//

பெறுநர்:

1. முதன்மைக் கல்வி அலுவலர்,
   தூத்துக்குடி.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   தூத்துக்குடி, கோவில்பட்டி.
3. மாவட்ட தொடக்க கல்வி அலுவலர்,
   தூத்துக்குடி, கோவில்பட்டி
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
5. சம்பந்தப்பட்ட கல்லூரி (ம) தொழில்நுட்பக்
   கல்லூரி முதல்வர்கள்,
   தூத்துக்குடி மாவட்டம்.

ந.க.எண்.பிந7/43608/2022 நாள்: 10.11.2022

அய்யா/அம்மையீர்,

பொருள்: தூத்துக்குடி மாவட்டம் - மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் - சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கான மத்திய அரசின் கல்வி உதவித்தொகை திட்டம் - 2022 - 23 ஆம் கல்வியாண்டில் மாணவ/ மாணவியர்களை பள்ளிப் படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெறுவதற்கு இணையதளம் மூலம் விண்ணப்பிக்க கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதை தெரிவித்து - கூட்டம் நடத்துதல் - கூட்டத்தில் கலந்து கொள்ளத் தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்களின் கடித எண்.பி1/2947/2021, நாள் 25.07.2022
2. சென்னை, பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.டி1/5210/2022, நாள்: 04.11.2022

---

பார்வை 1-ல் காணும் கடிதத்தில், தூத்துக்குடி மாவட்டத்தில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் மைய/மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் 2022-23 ஆம் கல்வியாண்டில் இந்திய அரசின் பள்ளிபடிப்பு, பள்ளிமேற்படிப்பு தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை (Merit cum Means) பெறுவதற்கு மத்திய அரசின் www.scholarships.gov.in என்ற தேசிய கல்வி உதவித்தொகை இணைய தளத்தில் (NSP)ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் சுற்றறிக்கையின்படி 2022-23 கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திடவும்,

மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மற்றும் சிறுபான்மை மாணவ/மாணவியர்களுக்கான கிராமப்புற பெண்கல்வி ஊக்குவிப்புத்தொகை வழங்கும் திட்டம் போன்ற கல்வி உதவித்தொகை திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திடவும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் 11.11.2022 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள சங்கு கூடத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் முதன்மைக் கல்வி அலுவலர்,, மாவட்ட கல்வி அலுவலர்கள், அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் கல்லூரி முதல்வர்கள் மற்றும் கல்வி உதவித்தொகை திட்டங்களுடன் தொடர்புடைய உதவியாளர்களும் கண்டிப்பாக கலந்து கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்படி, கூட்டத்தில் கல்வி உதவித்தொகை தொடர்பாக கீழ்க்கண்டவாறு நிகழ்வுகள் விவாதிக்கப்படவும், ஆய்வும் மேற்கொள்ளப்பட உள்ளது.

1. மிகப்பிற்படுத்தப்பட்டோர்க்கான கிராமப்புற பெண்கல்வி ஊக்கத்தொகை திட்ட கேட்புகள் சமர்ப்பித்தல்.
2. சிறுபான்மை மாணவ/மாணவியர்களுக்கான கிராமப்புற பெண்கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டம், கேட்புகள் தயார் செய்தல்.
3. 2018-19, 2019-20, 2020-21 (ம) 2021-22 ஆண்டுகளில் கிராமப்புற பெண்கல்வி ஊக்கத்தொகை பயனீட்டுச் சான்றுகளை சமர்ப்பிக்காத மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் பயனீட்டுச் சான்றுகளை சமர்ப்பித்தல்.
4. சிறுபான்மை கல்வி உதவித்தொகை தொடர்பான பள்ளி தலைமையாசிரியர்கள் பணியிட மாறுதல் (ம) ஆதார் விவரங்களை திருத்தம் செய்திருக்கும் பள்ளிகளின் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officers) மற்றும் கல்வி நிலைய தலைவர் ஆகியோர் தங்களின் ஆதார் நகல் மற்றும் கடிதவரைவினை கூட்டம் நடைபெறும் நாளன்று தவறாது சமர்ப்பித்தல்.
5. சிறுபான்மை கல்வி உதவித்தொகை தொடர்பான கேட்புகளை பள்ளி தலைமையாசிரியர் கையொப்பமிட்டு தூத்துக்குடி, மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் தவறாது சமர்பித்தல்.
6. பிவ/மிபிவ/சீம மாணவ/மாணவியர்களுக்கு இலவச கல்வி மற்றும் பள்ளிமேற்படிப்பு கல்வி உதவித்தொகை ளதிட்டங்கள்.

9/11/22

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலகம்,
தூத்துக்குடி.

10.11.22

அனுப்புநர்
திரு. [illegible],
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
திருநெல்வேலி.

பெறுநர்
1. மண்டல இணை இயக்குநர்,
கல்லூரி கல்வி இயக்ககம்,
திருநெல்வேலி மாவட்டம்.
2. முதல்வர்கள்,
அனைத்து கல்லூரிகள்,
திருநெல்வேலி மாவட்டம்.

15 FEB 2023

1617

208/2023

ந.க.எண்.ப3/17823/2022, நாள்: 13.02.2023

அய்யா/அம்மையீர்,

பொருள்: ஆதிதிராவிடர் நலம் - திருநெல்வேலி மாவட்டம் - 2022-2023 ஆம் ஆண்டு - போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்பதற்கான இணையதளம் 30.01.2023 திறக்கப்பட்டுள்ளது - 28.02.2023-க்குள் மாணாக்கர்களின் விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய அனைத்து கல்லூரிகளுக்கும் அறிவுறுத்துதல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.எல்4/14527/2022, நாள்: 20.05.2022.
2. சென்னை ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.எல்4/14527/2022, நாள்: 16.06.2022.
3. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.ப3/17823/2022, நாள்: 25.06.2022.
4. திருநெல்வேலி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் செயல்முறை நாள்:01.02.2023.
5. சென்னை ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் காணொளி காட்சி, நாள் 02.02.2023, 03.02.2023.
6. சென்னை ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.எல்4/14527/2022-1, நாள்: 02.02.2023.

*****

பார்வையில் காணும் சென்னை ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் கடிதங்களின்படி, 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க மாணாக்கர்கள் / கல்வி நிறுவனங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள் குறித்து கல்வி நிறுவனங்களுக்கு பார்வையில் கண்ட இவ்வலுவலக கடிதங்களின் மூலம் அனைத்து கல்லூரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் கல்வியாண்டினை பொறுத்தமட்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் இணையவழியில் செயல்படுத்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

1. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்
2. உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை (அரசு / அரசு உதவிபெறும் கல்லூகள் மட்டும்)
3. கற்பிப்புக் கட்டண சலுகை

4. இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்
5. முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவியர்களுக்கு மட்டும் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்

தற்போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் மேற்காணும் கல்வி உதவித்தொகைத் திட்டத்திற்கான ஒருங்கிணைந்த இணையதளம் 30.01.2023 அன்று மாணவர் பதிவிற்காக திறக்கப்பட்டுள்ளது. புதிய நடைமுறையின்படி கல்வி உதவித்தொகை பெற இணையவழியில் மாணாக்கர்களே விண்ணப்பிக்க வேண்டும் என்பதால், ஆதார் எண், இணையவழியில் பெறப்பட்ட வருமான சான்று, சாதி சான்று உள்ளிட்ட ஆவணங்களுடன்30.01.2023-லிருந்து 28.02.2023-க்குள் https://tnadtwscholarship.tn.gov.in. என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும் என்பதையும், முந்தைய ஆண்டுகளுக்கு கல்வி உதவித்தொகை பெற்று, புதுப்பித்தல் (Renewal Students) விண்ணப்பிக்கும் மாணாக்கர்களும் 2022-2023 ஆம் கல்வியாண்டில் கட்டாயம் புதிய இணையத்தில் தங்களது விவரங்களை பதிவு செய்ய வேண்டும் என்ற விவரத்தினை கல்வி நிறுவனத்திற்கு தெரிவிக்குமாறு பார்வை 6-இல் கண்ட கடிதத்தின்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும், கல்வி நிறுவனங்கள், கல்வி நிறுவனத்தில் பயிலும் தகுதியுள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் கிருத்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் இன மாணாக்கர்கள் கல்வி உதவித்தொகை பெற இணையவழியில் விண்ணப்பித்ததை உறுதி செய்யவும், மாணாக்கர்கள் இணையவழியில் விண்ணப்பிக்கும் போது ஏற்படும் ஐயங்களை களைய தங்களது கல்லூரியில் நியமிக்கப்பட்ட பற்றாளரைக்கொண்டு (Nodal Officer) வழிகாட்டுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டு கல்வியாண்டு முதல் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள கல்வி நிறுவனங்களுக்கு கல்வி நிறுவனங்களுக்கு மட்டும் கற்பிப்புக் கட்டண சலுகை (Tuition Fee) இணையவழியில் அனுமதிக்கப்பட வேண்டும்.

1. மீன்வள பல்கலைக்கழகம்,வேளாண்மைப் பல்கலைக்கழகம், சட்டப் பல்கலைக்கழகம், மருத்துவப் பல்கலைக்கழகம், தொழில்நுட்ப பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம், உள்ளிட்ட அனைத்து அரசு / அரசு உதவிபெறும் பல்கலைக்கழகங்கள் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகள்.
2. ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்கள்.
3. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் / பாலிடெக்னிக் கல்லூரிகள் (Govt Aided Engineering / Polytechnic Colleges)

கற்பிப்புக் கட்டண சலுகை பெற தகுதி பெறாத கல்வி நிறுவனங்கள்

அரசு / அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

மேற்காணும் கல்வி நிறுவனங்களில் பயிலும் அனைத்து மாணாக்கர்களும் கற்பிப்புக் கட்டணம் (Tuition Fee) சம்மந்தப்பட்ட துறைகளால் விலக்களிப்பு செய்யப்பட்டுள்ளதால் அக்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு கற்பிப்புக் கட்டணம் அனுமதிக்கப்படமாட்டாது.

இக்கல்வியாண்டு முதல் மாணாக்கரின் வங்கிக் கணக்கிற்கே நேரடியாக கற்பிப்புக் கட்டணம் வழங்கப்படுகிறது என்ற விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ந.க.எண்: 208/அ3/2022 நாள்: .02.2023

நகல் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
திருநெல்வேலி.

பெறுநர்
முதல்வர்/செயலர்,
அரசு/அரசு உதவிபெறும்/
சுயநிதி கல்லூரிகள்
திருநெல்வேலி மண்டலம்

13/2/23

22.2.23

004397

ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-5

அனுப்புநர்

திரு. த. ஆனந்த்,இ.ஆ.ப.,
இயக்குநர்,
ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்,
சேப்பாக்கம்,சென்னை-05.

பெறுநர்

1. இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
கிண்டி, சென்னை 25
2. இயக்குநர்,
பல்தொழில் நுட்பக் கல்வி இயக்கக
கிண்டி சென்னை 25.
3. இயக்குநர்,
மருத்துவக் கல்வி இயக்ககம்,
சென்னை 10.
4. இயக்குநர்,
கல்லூரி கல்வி இயக்கம்,
சென்னை 06
5. இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை 6
6. இயக்குநர்,
இந்திய மருத்துவம் மற்றும்
ஹோமியோபதி,
அரும்பாக்கம், சென்னை 106

ந.க.எண் எல்4 / 14527 / 2022-2 நாள் : 02.02.2023

அய்யா,

பொருள்: கல்வி உதவித் தொகைத் திட்டங்கள் - 2022-2023 ஆம் கல்வியாண்டிற்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தில் கீழ் விண்ணப்பிப்பதற்கான இணையதளம் (கல்லூரி) 30.01.2023 திறக்கப்பட்டுள்ளது - 28.02.2023 க்குள் மாணாக்கர்களின் விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய அனைத்து கல்லூரிகளுக்கும் அறிவுறுத்தக் கோருதல் - தொடர்பாக

பார்வை சம்மந்தப்பட்ட ஆணைகள்

=====

2022-2023 ஆம் கல்வியாண்டினை பொறுத்தமட்டில் கீழ்கண்ட திட்டங்கள் இணையவழியில் செயல்படுத்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

1. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத்திட்டம்
2. ப்ரி மெட்ரிக் கல்வி உதவித் தொகைத்திட்டம்
3. சுகாதாரமற்ற தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம்
4. உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை
5. கற்பிப்புக் கட்டண சலுகை
6. இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்
7. முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவியர்களுக்கு மட்டும் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்

தற்போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் மேற்காணும் கல்வி உதவித் தொகை திட்டத்திற்கான ஒருங்கிணைந்த இணையதளம் 30.01.2023 அன்று மாணவர் பதிவிற்காக திறக்கப்பட்டுள்ளது. புதிய நடைமுறையின்படி, கல்வி உதவித் தொகை பெற இணையவழியில் மாணாக்கர்களே விண்ணப்பிக்க வேண்டும் என்பதால், ஆதார் எண், இணையவழியில் பெறப்பட்ட வருமான சான்று, சாதி சான்று உள்ளிட்ட ஆவணங்களுடன் 30.01.2023 லிருந்து 28.02.2023 க்குள் https://tnadtwscholarship.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும் என்பதையும், முந்தைய ஆண்டுகளுக்கு கல்வி உதவித் தொகை பெற்று, புதுப்பித்தல் (Renewal Students) விண்ணப்பிக்கும்

2022-2023 ஆம் கல்வியாண்டினை பொறுத்தமட்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் இணையவழியில் செயல்படுத்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

1. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத்திட்டம்
2. ப்ரி மெட்ரிக் கல்வி உதவித் தொகைத்திட்டம்
3. சுகாதாரமற்ற தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம்
4. உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை
5. கற்பிப்புக் கட்டண சலுகை
6. இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்
7. முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவியர்களுக்கு மட்டும் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்

தற்போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் மேற்காணும் கல்வி உதவித் தொகை திட்டத்திற்கான ஒருங்கிணைந்த இணையதளம் 30.01.2023 அன்று மாணவர் பதிவிற்காக திறக்கப்பட்டுள்ளது. புதிய நடைமுறையின்படி, கல்வி உதவித் தொகை பெற இணையவழியில் மாணாக்கர்களே விண்ணப்பிக்க வேண்டும் என்பதால், ஆதார் எண், இணையவழியில் பெறப்பட்ட வருமான சான்று, சாதி சான்று உள்ளிட்ட ஆவணங்களுடன் 30.01.2023 லிருந்து 28.02.2023 க்குள் https://tnadtwscholarship.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும் என்பதையும், முந்தைய ஆண்டுகளுக்கு கல்வி உதவித் தொகை பெற்று, புதுப்பித்தல் (Renewal Students) விண்ணப்பிக்கும்

மாணாக்கர்களுக்கு 2022-2023 ஆம் கல்வியாண்டிற்கான உடனே புதிய இணையதளத்தில் தங்களது விண்ணப்பங்களை பதிவு செய்ய வேண்டும் என்ற விவரத்தினை கல்வி நிறுவனத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.

மேலும், கல்வி நிறுவனங்கள், கல்வி நிறுவனத்தில் பயிலும் தகுதியுள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் இன மாணாக்கர்கள் கல்வி உதவித் தொகை பெற இணையவழியில் விண்ணப்பித்ததை உறுதி செய்யவும். மாணாக்கர்கள் இணையவழியில் விண்ணப்பிக்கும் போது ஏற்படும் ஐயங்களை களைய அவர்களது கல்லூரியில் நியமிக்கப்பட்ட பற்றாளரைக்கொண்டு (Nodal officer) வழிகாட்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள கல்வி நிறுவனங்களுக்கு மட்டும் கற்பிப்புக் கட்டண சலுகை (Tuition Fee) இணையவழியில் அனுமதிக்கப்பட வேண்டும்.

1. மின்னனு பல்கலைக்கழகம், வேளாண்மைப் பல்கலைகழகம், சட்டப் பல்கலைக்கழகம், மருத்துவப் பல்கலைக்கழகம், தொழில்நுட்ப பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் உள்ளிட்ட அனைத்து அரசு / அரசு உதவிபெறும் பல்கலைக் கழகங்கள் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகள்

2. ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்கள்

3. அரசு (ம) அரசு உதவி பெறும் பொறியியல் / பாலிடெக்னிக் கல்லூரிகள் (Govt Aided Engineering / Polytechnic Colleges)

கற்பிப்புக் கட்டண சலுகை பெற தகுதி பெறாத கல்வி நிறுவனங்கள்

அரசு / அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

2022–2023 ஆம் கல்வியாண்டு முதல் மாணாக்கரின் வங்கிக் கணக்கிற்கே நேரடியாக கற்பிப்புக் கட்டணம் வழங்கப்படுகிறது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்/- த. ஆனந்த்.
ஆதிதிராவிடர் நல இயக்குநர்

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக.

02/02/2023

இமெயில் மற்றும் Whatsapp மூலமா

ந.க.எண்.பிந3/14871/2022

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலகம்,
தூத்துக்குடி.
நாள்: 31.01.2023

## சுற்றறிக்கை

பொருள்:- பிற்படுத்தப்பட்டோர் - மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் - கல்வி உதவித்தொகை 2022-2023 ஆம் ஆண்டு - புதியது கேட்புகளை ஒப்பளிப்பு செய்தல் - அறிவுரைகள் வரப்பெற்றது - தொடர்பாக.

பார்வை:- சென்னை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் அவர்களின் கடித எண். டி1/5210/2022 நாள்:24.01.2023.

⊚⊚⊚

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை மூலம் தகுதியான அனைத்து கல்லூரி மாணவ/மாணவியர்களுக்கும் மாவட்ட அளவில் மின்னணு பரிமாற்றம் வாயிலாக கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது. 2016-2017ஆம் ஆண்டு முதல் துறைத் தலைமையிடத்திலிருந்து நேரடியாக மாணவர்களின் வங்கி கணக்கிற்கு மின்னணு பரிமாற்றம் மூலமாக கல்வி உதவித் தொகை பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது (Centralized Payment).

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ/மாணவியர்களுக்கான 2022-2023 ஆம் ஆண்டு புதுப்பித்தல் (Renewal) கல்வி உதவித்தொகை விண்ணப்பித்தல் ஆன்லைன் மூலம் 20.12.2022 அன்று முடிவுற்ற நிலையில், புதியதுக்கான (Fresh) விண்ணப்பங்கள் 25.01.2023 அன்று முதல் தொடங்கப்பட்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க 25.02.2023 அன்று வரை கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என பார்வையில் காணும் கடிதத்தில் வரப்பெற்றுள்ளது.

அதனடிப்படையில் தூத்துக்குடி மாவட்டத்தில் புதியது விண்ணப்பித்தல் குறித்து கீழ்க்கண்ட அறிவுரைகள் தொடர்புடைய கல்வி நிறுவனங்களுக்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால் வழங்கப்படுகிறது.

அ) <u>**வங்கி கணக்கு விவரங்கள்:**</u>

புதியது கல்வி உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கும் மாணவர்களிடமிருந்து சரியான வங்கி கணக்கு விவரங்களை (A/c No, IFSC Code, MICR Code, Bank Name) தவறாமல் பெற்று, அதை இணையதளத்தில் பதிவேற்றும் போது மிகவும் கவனமாக பதிவேற்றம் செய்ய வேண்டும். வங்கி

கணக்கு தொடர்பான விவரங்கள் பதியப்பட்ட பிறகு திருத்த இயலாது என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் வங்கி கணக்குடன் ஆதார் எண் இணைய பெற்றுள்ளதா என்பதை உறுதி செய்யவும் அறிவுறுத்தப்படுகிறது. தற்போது PFMS மூலம் கல்வி உதவித்தொகை மாணவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்படுவதால் IFSC Code ஐ கவனமாக பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆ) ஆதார் எண்.

கல்வி உதவித்தொகை புதியது விண்ணப்பிக்கும் பொழுது மாணாக்கர்களின் ஆதார் எண்ணை கவனமாக பதிவு செய்ய வேண்டும். நடப்பாண்டிலிருந்து ஆதார் எண் UIDAI இணையதளத்தில் சரிபார்க்க இருப்பதால் மேற்படி மாணவரின் பெயர், பெற்றோர் பெயர் மற்றும் பிறந்த தேதி, கைப்பேசி எண் ஆகியவை ஆதார் அட்டையில் உள்ளவாறு பதிவு செய்வது அவசியம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இ) வருமான உச்சவரம்பு மற்றும் முதல் பட்டதாரி குறித்த விவரங்கள்

பாலிடெக்னிக் /தொழிற்கல்வி படிப்புகளில் மனுதாரர் குடும்பத்தில் முதல் பட்டதாரியாகவும் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,50,000/- ஆக இருக்கும் பட்சத்தில் இலவச கல்வி (Free Education) திட்டத்தின் கீழ் உதவித்தொகை ஒப்பளிக்கப்படுகிறது. இதில் முதல் பட்டதாரி நிபந்தனையை பூர்த்தி செய்யாத அதே சமயத்தில் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,50,000/-க்குள் இருக்கும் மாணவர்களுக்கு பள்ளி மேற்படிப்பு (Post Matric) திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை ஒப்பளிக்கப்படுகிறது. எனவே கல்வி நிறுவனங்களுக்கு இவ்விவரத்தினை மீண்டும் வலியுறுத்தி உதவித்தொகை கோரிமனு செய்துள்ள மாணவர்களின் சான்றுகளை நன்கு பரிசீலித்து உரிய திட்டத்தில் (Post Matric/Free Education) உதவித்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

ஈ) மாற்றுத்திறனாளி விவரங்கள்

விண்ணப்பித்தலின் போது மாற்றுததிறனாளி குறித்த விவரங்கள் பூர்த்தி செய்தால் மட்டுமே விண்ணப்பமானது முழுமையாக நிறைவு பெறும். எனவே, விண்ணப்பிக்கும் போது மாற்றுத்திறனாளிகளுக்கான விவரத்தினை மிகவும் கவனத்துடன் பூர்த்தி செய்யுமாறு கல்வி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

உ) விடுதி விவரங்கள்

விடுதி தொடர்பான தகவல்களை பூர்த்தி செய்யும் போது விடுதியில் மாணவர்கள் சேர்ந்த தேதியினை சரியாக பூர்த்தி செய்ய வேண்டும்.

ஐ) 7.5% சதவீதம் இட ஒதுக்கீடு

7.5 சதவீதம் இட ஒதுக்கீட்டின் கீழ் MBBS/ B.S.M.S/ B.H.M.S/ B.U.M.S/ B.V.Sc/ BDS/ BE/B.Sc Agriculture/B.L/B.Tech Fisheries தொழிற்படிப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு கல்வி நிலையங்களில் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை என்பதால், மேற்படி மாணாக்கருக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுவதில்லை. மேலும் இந்த கல்வி ஆண்டில் (2022-2023) மேற்படி மாணவர்களுக்கு புதியது விண்ணப்பங்கள் விண்ணப்பிக்க கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

எ)விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்

கல்வி நிறுவனங்களில் புதியது விண்ணப்பிக்கும் பொழுது கவனமாக பதிவு செய்யுமாறும், பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை Principal Login ல் சமர்ப்பிக்கும் முன் மாணவர்களின் விவரங்களை சரிபார்த்த பின்னரே இறுதியாக சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது. சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் தவறு ஏதேனும் இருந்தால் அதற்கு கல்வி நிறுவனமே முழு பொறுப்பு என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஏ) சுயநிதி கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டில் சேரும் மாணவர்கள் மட்டுமே விண்ணப்பித்தல் மற்றும் முதல் பட்டதாரி சான்று ஆய்வு செய்தல்

இலவச கல்வி - தொழிற்படிப்பு (First Graduate) மற்றும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை (Non-First Graduate) திட்டங்களின் கீழ் சுயநிதி கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெற்று தொழிற்படிப்பு பயிலும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்குட்பட்ட மாணவ/மாணவியர்களுக்கு மட்டுமே கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்கப்பட வேண்டும். மேலும் முதல் பட்டதாரியாக இருப்பின் முதல் பட்டதாரி சான்றை பெற்று சரிபார்த்த பின் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் (Management Quota) சேரும் மாணவ/மாணவியருக்கு கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்து வழங்க கூடாது என்பதால் விண்ணப்பிக்க கூடாது. மேலும் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சேர்ந்த மாணவர் என்பதற்கான Counselling copy மற்றும் முதல் பட்டதாரியாக இருப்பின் முதல் பட்டதாரி சான்று விண்ணப்பத்துடன் இணைத்து அவை அனைத்தும் நேரடி ஆய்வின் போது சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், 2022-2023 ஆம் கல்வியாண்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கல்லூரிகள் புதியதுக்கான (Fresh) விண்ணப்பங்களை 25.02.2023 க்குள் சமர்ப்பிக்க சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

31/1/23

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்
தூத்துக்குடி

பெறுநர்

சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்கள், தூத்துக்குடி மாவட்டம்

31-01-2023

## ப்ரீமெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை

1. அனைத்து பள்ளி/கல்லூரிகளுக்கும் **AISHE Code** பெற்றிருக்க வேண்டும். ஏற்கனவே பெற்றிருப்பின் அவை பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

2. அனைத்து பள்ளி/கல்லூரிகளிலும் மாணவர்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பிப்பது குறித்து உதவி செய்யும் பொருட்டு, **Scholarshoip Help desk** ஒன்றை அமைத்திட வேண்டும்.

3. அனைத்து பள்ளி / கல்லூரிகளில் கல்வி உதவித்தொகைக்கென **Nodal Officer** நியமித்திட வேண்டும்.

4. மாணாக்கரின் பெயர் பாலினம், பிறந்த தேதி ஆகியவை கல்வி சான்றிதழ்களில் (10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு) உள்ளவாறு ஆதாரில் இடம்பெற்றுள்ளதை உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு இல்லையெனில், பள்ளி சான்றிதழ்களில் இடம்பெற்றுள்ளவாறு மாணாக்கரின் பெயர் ஆதாரில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

5. மாணாக்கர்கள் கட்டாயம் இணையவழி மூலம் **(Online)** வருமான சான்றிதழ் மற்றும் சாதிச்சான்றிதழ்கள் பெற்றிருக்க வேண்டும்.

6. மாணக்கரின் பெயரில் வங்கி கணக்கு எண் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அவ்வங்கி கணக்கு எண் செயல்பாட்டில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

7. மாணாக்கரின் வங்கி கணக்கில் இடம் பெற்றுள்ள பெயர் அம்மாணாக்கரின் பள்ளி சான்றிதழ்களில் உள்ளவாறு இடம் பெற்றுள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

8. மாணாக்கரின் வங்கி கணக்குடன் ஆதார் எண் இணைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

9. மாணக்கரின் வங்கி கணக்கிற்கு நேரடி பலன் பரிமாற்றத்தைப் (DBT) பெறுதவற்கு மாணாக்கரின் ஆதார் எண் NPCI உடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை https://resident.uidai.gov.in/bank-mapper என்ற இணைய முகவரி மூலம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

10. மாணாக்கரின் ஆதார் எண். NPCI உடன் இணைக்கப்படவில்லை எனில் சம்மந்தப்பட்ட வங்கி மேலாளரை தொடர்பு கொள்ள அறிவுறுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.

11. மாணாக்கரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள முந்தை வங்கி கணக்கு எண்ணை மாற்றம் செய்யப்பட வேண்டும் எனில் மாணாக்கரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட வேண்டிய புதிய வங்கி கணக்கு விவரங்களை அவ்வங்கியின் கிளை மேலாளரிடம் சமர்பிக்கும் போது கட்டாயம் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட முந்தை வங்கி கணக்கு விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

12. மாணவரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசி எண் கட்டாயம் பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

13. 2022-2023 ஆம் கல்வியாண்டிற்கு, மாணக்கர்கள் சார்பான கல்வி உதவித்தொகை மாணக்கர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கும் வரை கல்வி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கட்டாயம் மற்றும் திருப்பி அளிக்கப்படாத கல்விக் கட்டணத்தினை செலுத்த வற்புறுத்தக்கூடாது.